# EVILS OF CASTE.

This Tract is addressed to the professors of the Christian Religion and points out the Evils of Caste. This is proved by showing

I. That Caste is not of divine origin.
II. That it is contrary to the word of God.
III. That it is a hinderance to the salvation of the Soul.
IV. That it destroys worldly comforts.
V. That it creates in bad feelings.

# குலாசாரம்.

இஃது.

இந்தேசத்திலே உண்டாயிருக்கிற சாதிவேற்றுமை இடைப்பட்டதென்றும், அது சத்தியவேதத்துக்கு விரோதமென்றும், ஆத்துமரட்சிப்புக்குத் தடையென்றும், சரீரசுகத்துக்கு நட்டமென்றும், துற்குணத்தை உண்டாக்கிறதென்றும் எடுத்துக்காட்டியது.

---

க. மோசே. க. அதி. உசா, உஎ. "பிற்பாடு பராபரன் நம்முடைய சாயலாக நம்முடைய ரூபத்தின்படியே மனிதரை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரங்களின் மச்சங்களையும், ஆகாசத்துப்பறவைகளையும், மிருகசீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேலூருகிற சகல ஊர்வனங்களையும் ஆளக்கடவர்களென்றார். அப்படியே பராபரன் மனிதனைத் தம்முடையசாயலாகச் சிஷ்டித்தார், அவனைப் பராபரனுடைய சாயலாகச் சிஷ்டித்தார், ஆணும்பெண்ணுமாக அவர்களைச் சிஷ்டித்தார்,,

2d. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000
1844.

ஆதியிலே பராபரன் உலகத்தைச் சிஷ்டித்தபொழுது மனுஷரையுண்டாக்கின வகையெப்படியென்று குறித்த வசனத்திற் காணலாயிருக்கும். இதுவே சத்தியவேத சார நிருணயம். இனிச் சைவசமய சாத்திரத்துள், பிரம சத்திரிய வைசிய சூத்திர என்னும் நான்கு வருணரும் பிரமாவின் முகத்திலும் புயத்திலும் அரையிலும்பாதத்திலும் இருந்து உற்பத்தியானார்களெனக் கூறப்படுகின்றது. இது இடைப்பட உண்டாயதெனப் பலகாலச் சரித்திரத்திலுந் தெளிவாய் அறிந்துகொள்ளலாம். அன்றியும் பிரமாவானவன் தன்னுடைய அங்கங்களில் நான்கங்கத்தினால் நான்கு வருணத்தாரையும் ஒருவர்க்கொருவர் இழிவாயும உயர்பாயுமுண்டாக்கிய காரணமென்ன? யாவரையும் ஓரங்கத்திற் செனிப்பியாமல் நாலு அங்கத்திற் செனிப்பித்தது உலகத்தில் ஒருவர்க்கொருவரை உயர்பு தாழ்வாய் வைக்கவேண்டுமென்றோ? அல்லது அவரவர் செய்த கருமபலத்தினால் அவரவரை அப்படியுண்டாக்கினதோ? இவ்விருவகையில் ஒன்றாயிருக்கவேண்டுமே? அவற்றுள் ஒருவர்க்கொருவர் உயர்பு தாழ்வாய் உலகத்தில் இருக்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டு உயர்ந்த அங்கத்தில் உயர்குலரையும் இழிந்த அங்கத்தில் இழிகுலரையும் உண்டாக்கினாரெனச் சொல்லில், இழிகுலர் வைதிகவொழுக்கங்களைக் கையேற்று நடக்கப்படாதெனவும், உயர்குலர் அவ்வொழுக்கங்களைக் கையேற்று நடக்கலாமெனவும் இழிகுலர்வே

தத்தைக்கேட்கவும் கற்கவும் படாதெனவும் கற்பித்த ரூபாந்திரமென்ன! அவர்கள் வேதத்தைக் கல்லாமலுங் கேளாமலும் வைதீககிருத்தியங்களைச் செய்யாமலும் விட்டிருந்தால் அவர்கள் கதியடையும் வழியென்ன, ஒன்றுமில்லை நரகமே அவர்கள் கதி. அந்த இழிகுலர் சருவலோக நியாயாதிபதியாகிய தேவனை நோக்கி நரகத்திலிருந்து முறையிட்டால் அவர் பிரமாவுடைய செயல் அப்படியிருந்தது நாம் என்செய்வோமென்பரோ! உங்கள்விதியிதுவென்பரோ! விதியினாலென்றால் விதித்த காரணமியாதென்று வினாவாரோ! அதற்கென்ன உத்தரம். அதைவிட்டு உங்கள் கன்ம பலம் அப்படியென்று சொல்லில், அவர்களுக்கு முன்னொரு பிறப்பில்லை அதனால் அவர்களுக்குக்கன்மமுமில்லை, கன்மமில்லாதபோதே சிட்டிகள் இழிவாய்ச் சிட்டிக்கவும் இழிந்த பிறப்பின் நிமித்தம் உண்டான பாதகத்தைக்கொண்டு நரகத்திற்றள்ளவும் நியாயங்காணாது. (இது அன்று) அவர்கள் தங்கள் தங்கள் குலாசாரந் தவறாமல் நடந்தால் முத்தியடையலாமெனச் சொல்லில், வேதத்தைக் கற்கவும் கேட்கவும் வேதபாரகரைத் தொடவும் வேதாப்பியாசம் பண்ணுமிடத்துக்குப்போகவும் தேவாராதனை செய்யவும்படாதென்று விலக்கப்பட்ட இழிகுலர் எப்படி முத்திசேர்ந்திருப்பார். முத்தாத்துமாக்கள் பிராமணரைப் பார்க்க அசுத்தரோ! முத்தித்தலம் பிராமணருடைய வீடுகளில் அசுத்தமோ! மோட்சவாசிகள் தீண்டிற தீயிற் பிராமணருடைய வேதம்

உச்சிதமோ? தேவசன்னிதானத்திற் பிராமண
ருடைய தேவாலயம் மகிமையா? இல்லையே.
பின்னை வேதத்தைக் கற்கவும் கேட்கவும் தேவா
ராதனை பண்ணவும் தேவாலயத்திற் பிரவேசிக்க
வும் பிராமணரோடே கூட இருக்கவுந் தொட
வுங் கூடாத வருணத்தார் மோட்சஞ் சேர்வா
ர்களென்று சொல்வதெப்படி அவர்கள் சுத்திய
டைந்து பக்குவ ஆத்துமாக்களாலல் முத்தி
சேர்வரெனில் அவர்கள் வைதிகவொழுக்கமி
ன்றிச் சுத்தியடைவதெப்படி. இது நிற்கச்
சைவசமய சாத்திரத்தின்படி பார்த்தாலும் பி
ரம, சத்திரிய, வைசிய, சூத்திர என்னும் நான்
கு வருணமேயல்லாமல் வேளாண், மடப்ப
ளி, அகம்படி, மலையகம், பரதேசி, கம்மாள
ர், சான்றார், சாலியர், வண்ணார், துரும்பர், ப
றையர், நளவர் முதலிய அனேகசாதிபேதமு
ண்டானதெப்படி. இவர்கள் மேற்சொல்லிய நா
லுவருணத்துட் பிறந்தவர்களோ! அல்லது வே
றொரு வழியாய்வந்தவர்களோ? சொல்லுங்கள்.
இதுவுமன்றி முன்சொன்ன சாதிகளுக்குள்ளும்
ஒவ்வொருசாதியும் வெவ்வேறு குலங் குலமாய்
ப் பிரிந்து ஒவ்வொருகுலத்தார் மற்றக்குலத்தா
ரை இழிவாய்ப் பேசுகிறார்கள். இவர்கள் ஒரு
குலத்தில் மற்றக்குலத்தார் போசனபானம்பண்
ணவும் பெண்கொள்ளவும் கொடுப்பனவு பண்
ணவுந்தகாதென்று சொல்லித் தள்ளுகிறார்கள்.
இவர்களுக்குள்ளிருக்கிற சாதிவித்தியாசத்தை
ப் பார்த்தால் முன்பின்னுக இருநூறு வகை
யான சாதிபேதமிருக்கும். இவைகளெல்லாம்

எப்பொழுது உண்டானது. இதுகாரியத்தைச் சத்தியவேதப்படி பார்த்தால் ஆதியான சாதியொன்றென்று விளங்கும். சைவசமய ஆகமத்தின்படி பார்த்தால் நாலுசாதியென்று விளங்கும். உலக வளக்கத்தைப் பார்த்தால் அனேகசாதியென்று விளங்கும். இம்மூன்று பிரிவாய்க் காணப்படுகிற காட்சியும் ஒன்றாயிருக்கக்கூடாது. ஒன்றுமெய்யாயும் மற்றயவிரண்டும் பொய்யாயும் இருக்கவேண்டும். இவைகளுள் எதுமெய்யென்றும் எவை பொய்யென்று நீங்களே தீர்மானம்பண்ணலாம். இதற்கு அறிவாளிகள் தாமே மறுமொழிசொல்லட்டும். நாங்கள் வேதத்தைக்கொண்டும் விவேகத்தைக்கொண்டும் சாதிபேதம் பிராமணராலும் மற்றத் தற்பெருமைக்காரராலும் உண்டாக்கப்பட்டதேயன்றி அறுதியானதல்லவென்று நாங்கள் சொல்லுகிறோம்.

---

௨வது. சாதிவேற்றுமை சத்தியவேதத்துக்கு விரோதமென்பது.

பிலிப்பியர், ௨. அதிகாரம், ௨-௮. நீங்கள் ஒரேவிதமாய்ச் சிந்தனைபண்ணிக்கொண்டு ஒரேவிதமான அன்புள்ளவர்களாய் இசைந்த ஆத்துமாக்களாய், ஒன்றையே சிந்தித்துக்கொண்டு இப்படி என் சந்தோஷத்தை நிறைவேற்றுவீர்களாக. ஒன்றையும் நீங்கள் வாதத்தினாலே அல்லது வீண்பெருமையினாலே செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையானவர்களென்றெண்ணிக்கொள்ளுவீர்களாக. அவரவர் தங்களுக்கானவைகளை

மாத்திரமல்லப் பிறருக்கானவைகளையும் நோக்
குவீர்களாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை
யே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் பரா
பரனுடைய சாயலாயிருந்தும்பராபரனுக்கு ஒ
ப்பாயிருக்குதலைக் கொள்ளையிடப்பட்ட உடை
மையென்றெண்ணுமற் றம்மைத்தாமே வெறு
மையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனித
ர்சாயலாகப் பிறந்ததுமல்லாமல், அவர் மனித
ரூபமாகக் காணப்பட்டபின்பு மரணத்திற்குத்
தம்மைத் தாழ்த்திச் சிலுவையின் மரணத்திற்
குக் கீழ்ப்பட்டவரானுர். ௨. கொரிந். ௮. அ
திகாரம், ௯. வச. நம்முடைய கத்தராகிய இ
யேசுக்கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கி
றீர்களே. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும்
நீங்கள் அவருடைய தரித்திரத்தினுலே ஐசுவரி
யவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தமே த
ரித்திரரானுர்.

௧. கொரிந். ௧. அதிகாரம். ௨௬—௨௯. சகோ
தரரே, உங்களை அழைத்த விதத்தைப் பாருங்
கள். அநேக லௌகீகஞானிகளாவது, அநே
க வல்லவர்களாவது, அநேக உயர்குலத்தாரா
வது இல்லையே அந்த ஞானிகளை வெட்கப்படு
த்தும்படிக்குப் பராபரன் உலகத்திலே பைத்
தியரென்றெண்ணப்பட்டவர்களைத் தெரிந்து
கொண்டார். பலவான்களை வெட்கப்படுத்
தும்படிக்குப் பராபரன் உலகத்திலே பலவீ
னரானவர்களைத் தெரிந்துகொண்டார். இரு
க்கிறவர்களைத் தள்ளும்படிக்கு இல்லாதவர்க
ளையும் உலகத்திலே இழிந்தகுலத்தாரானவர்க

ளையும் அத்பமாயெண்ணப்பட்டவர்களையும்
பராபரன் தெரிந்துகொண்டார். எந்தமாமி
சதேகியும்பராபரனுக்குமுன்பாகப்பெருமை
பாராட்டாதபடிக்கு அப்படிச்செய்தார். கொ
லோசர். ௩. அதி. ௰௧. அங்கே கிரேக்கனென்
றும் யூதனென்றும், விருத்தசேதன முள்ளவ
னென்றும், விருத்தசேதனமில்லாதவனென்று
ம், புறத்தேசத்தானென்றும் ஸ்கீத்தனென்று
ம் அடிமையென்றும் சுயாதீனனென்றும் சொ
ல்லப்பட்ட வேற்றுமையில்லை. கிறிஸ்துவே
எல்லாருக்குள்ளும் எல்லாமுமாயிருக்கிறார்.

அல்லாமலும் கிறிஸ்துநாதர் யூதர்களுக்குள்
ளே வலைஞர், ஆயக்காரர்முதலிய அற்பமனுஷ
ர்களைத்தமக்குச் சீஷராகத்தெரிந்துகொண்டு
அவர்களோடே போசனபானம்பண்ணி யூத
ர்கள் அசட்டைபண்ணின ஆயக்காரருக்கு நன்
மைசெய்யும்படிக்கு அவர்களுடைய வீட்டுக்கு
ப்போய்க்குடித்துப் புசித்துப் போதித்து வந்
தார். அதைக் குறித்து விசனப்பட்ட பரிசேய
ருக்கு அவர்களுடைய சிந்தனைகளைத் தகாதெ
ன்று காண்பித்துக் கண்டிப்பான வசனங்களி
னாலேஎச்சரித்தார். மத்தேயு, ௯. அதி. ௰-௰௩.
பின்பு அவர் வீட்டிலே போசனபந்தியிருக்
கையில் அநேகம் ஆயக்காரரும் பாவிகளும்
வந்து இயேசுவுடனேயும் அவருடைய சீஷர்க
ளுடனேயும் கூடப்பந்தியிருந்தார்கள். பரிசே
யர் அதைக்கண்டு அவருடைய சீஷர்களை நோ
க்கி என்னத்தினாலே உங்கள் போதகர் ஆயக்கார
ரோடும் பாவிகளோடும் போசனம்பண்ணுகி

றுரென்றார்கள். இயேசுவானவர் அதைக்கே
ட்டு அவர்களை நோக்கிச் சொஸ்தமுள்ளவர்க
ளுக்கு வைத்தியன்வேண்டுவதில்லை. வியாதியு
ள்ளவர்களுக்கே அவன் வேண்டும். மேலும்
பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேன் என்கி
ற வாக்கியத்தின் கருத்தை நீங்கள் போய்ப் ப
டித்துக்கொள்ளுங்கள். அந்தப்படி நான் நீ
திமான்களை அல்லப் பாவிகளையே மனந்திருப்
புதற்கு அழைக்கவந்தேனென்றார். யோவான்,
௰௩. அதிகாரம், ௰௪. ௰௫. வசனங்கள். ஆண்
டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்
களைக் கழுவினபடியால் நீங்களும் ஒருவருடை
ய கால்களை ஒருவர்கழுவக்கடவீர்கள். நான் உங்
களுக்குச் செய்ததுபோல நீங்களுஞ் செய்யும்
படிக்கு உங்களுக்குவகையைக்காண்பித்தேன்.

அவர் சகல வல்லமையுடையவராயிருந்தும்
நமக்காகப் பாடுபடவும் மரணமடையவும் த
ம்மை ஒப்புக்கொடுத்ததிலே அவர் மிகுந்த
அன்பையும் மனத்தாழ்மையையுங் காண்பித்
தாரே. அப்படியிருக்க அவரைப் பின்பற்று
கிறவர்களாகிய நாம் மற்றவர்களில் எவனையா
னாலும் அற்பமாயெண்ணலாமா? கிறிஸ்துநாத
ர் சுத்தம்பண்ணிக்கொண்ட ஒருவனைத் தொ
டுவதும் அவனுடனே இருப்பதும் அவனுடை
ய கையிலிருந்தியாதொன்றை வாங்குவதும் அ
சுத்தமென்று சொல்லலாமா? சொன்னால் அ
து அன்பும் மனத்தாழ்மையுமா நீதிமான்களை
யல்லப் பாவிகளை இரட்சிக்கவந்தோமென்று
சொன்னஇரட்சகருக்குப் பிரியமாயிருக்குமா?

அப்படியிருக்க நம்மைப்போலக் கிறிஸ்தவர்க
ளானவர்களை நாம் நிந்திக்கலாமா? இதை நீங்க
ள் கேட்டுக் கிறிஸ்துநாதர் மகா பரிசுத்தராயி
ருந்ததினால் அல்லவோ அப்படிப்பட்ட அன்
பும் மனத்தாழ்மையுமுள்ளவராயிருந்தார். பா
விகளாகிய நாமும் அவரைப்போலிருக்கக் கூ
டுமோவென்று சொல்வீர்கள். அப்படிச்சொல்
லப்படாது. அவர் நமக்கு முன்மாதிரி காட்
ட வந்தவரானபடியால் அவர் செய்ததுபோ
ல நாமுஞ் செய்யவேண்டும். அல்லாமலும் அ
தைக் குறித்து, மத். ௰௧. அதிகாரம். ௨௮-௩௰.
வச. அவர் சொல்லுகிறது வருத்தப்பட்டுப்
பாரஞ் சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்க
ளெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான்
உங்களுக்கு ஆறுதல்செய்வேன். நான் சாந்
தமாயும் மனத்தாழ்மையாயுமிருக்கிறபடியி
னாலும் நான் வைக்கிற நுகத்தடி மெதுவாயும்
நான் ஏற்றுகிற சுமை இலேசாயுமிருக்கிறபடி
யினாலும் நீங்கள் என்னுடைய நுகத்தடியை ஏ
ற்றுக்கொண்டு என்னிடத்திற் கற்றுக்கொள்
ளுங்கள். அப்பொழுது உங்களாத்துமாக்களு
க்கு ஆறுதல் கிடைக்குமென்றும்,
யோவான். ௰௩. அதி. ௩௪. நான் உங்களில் அன்
புகூர்ந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர்
அன்பாயிருங்கள். லூக்கா, ௨௨. அதிகாரம்,
௨௫. புறத்தேசத்தாருடைய இராசாக்கள் அ
வர்களைப் பலபந்தமாய் ஆண்டுகொள்ளுகிறா
ர்கள். அல்லாமல் அவர்கள் மேல் அதிகார
ஞ்செலுத்துகிறவர்கள் தருமதுரைகளென்று

அழைக்கப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அ
ப்படியிருக்கக்கூடாது. உங்களில் எவன் பிரதா
னமானவனாயிருக்க வேண்டுமென்றிருக்கிற
னோ அவன் மற்றவர்களுக்குப் பணிவிடைகார
னாயிருக்கவேண்டும். எவன் தன்னை மேன்மை
ப்படுத்துகிறானோ அவன் தாழ்த்தப்படுவான்.
தன்னைத் தாழ்த்துகிறவனோ மேன்மையாக்க
ப்படுவான். நீங்களெல்லாரும் சகோதரராயிரு
க்கிறீர்களென்று யேசுநாதர் கட்டளையிட்டார்.

"அப்போ. ௰. அதி. ௧௧-௰௫. அவன் ஞான
திருஷ்டி அடைந்து வானந் திறந்திருக்கவும்
நாலு தொங்கல் கட்டப்பட்ட பெரிய துப்ப
ட்டியைப்போல ஒரு கூடு தன்னிடத்துக்கு இ
றங்கித் தரையில் விடப்பட்டிருக்கவும் அதிலே
பூமியிலுள்ள சகலவிதமான நாலுகாற் சீவன்
களும் காட்டுமிருகங்களும் ஊர்வனவைகளும்
ஆகாயத்துப் பறவைகளும் இருக்கவும் கண்டா
ன். அல்லாமலும் பேதுருவே எழுந்திரு அடி
த்துப் புசிப்பாயாகவென்று ஒரு சத்தம் அவ
னுக்குண்டாயிற்று அதற்குப் பேதுரு ஆண்
டவரே, அப்படியல்ல ஏலாததாயும் அசுத்தமா
யுமிருக்கிறதை நான் ஒருக்காலும் புசிக்கவில்லை
யே என்றான். அப்பொழுது பராபரன் சுத்த
மாக்கினவைகளை நீ அசுத்தமென்றெண்ணாதிரு
ப்பாயாகவென்று இரண்டாந்தரம் சத்தம் அ
வனுக்குண்டாயிற்று,, இதினாலே சாதிவேற்று
மை கிறிஸ்தவர்கள் கைக்கொள்ளத் தக்கதல்ல
வெனத் தெளிவித்திருக்கின்றது. இவைகளை நீ
ங்கள் வாசித்துக் கண்டும் இந்தக் கட்டளைகளை

அப்போஸ்தலருக்கேயிட்டிருக்கிறது. அவர்கள் பரிசுத்த ஆவியை யடைந்தபடியினாலே அப்படிச்செய்யத் திராணியுள்ளவர்களாய் இருந்தார்கள். நம்மாலும் அப்படி இயலுமா வென்பீர்கள். அப்படியல்ல வேதத்திலே யிட்டிருக்கிற கட்டளைகள்யாவும் யாவருக்கும் பொதுவாகவேயிடப்பட்டிருக்கின்றன. ஆகையாற் பழய பாரம்பரை நியாயங்களுள் வேத வசனத்திற்கொவ்வாத சகல ஆசாரங்களையும் விலக்கிக் கிறிஸ்துநாதருடைய முன்மாதிரியைப் பின்பற்றி வேதத்தின்படி தவறாமல் நடப்பது யாவர்க்குங் கடமையாயிருக்கின்றன.

“மாற்கு. ௭. அதி. ௧-௫. சுலோகம் மட்டாக. பரிசேயரும் மற்றயூதர்களெல்லாரும் பெரியோர்களுடைய பாரம்பரை நியாயங்களைக் கைக்கொள்ளும்படிக்கு மணிக்கட்டுவரைக்குங் கை கழுவாமற் போசனம்பண்ணமாட்டார்கள். அல்லாமலுஞ் சந்தைகளிலிருந்து வந்தால் ஸ்நானம்பண்ணாமற் போசனம்பண்ணமாட்டார்கள். மேலும் சலபாத்திரங்களையுங் குடங்களையும் செம்பு பானைகளையும் கட்டில்களையும் ஸ்நானம்பண்ணிவித்து மற்றும் அப்படிப்பட்ட அநேகஞ் சடங்குகளைப்பற்றிக்கொள்ளுவார்கள். ஆதலாற் பரிசேயரும் வேதபாரகரிற் சிலருங் கூடி எருசலேம்பட்டினத்திலிருந்து அவரிடத்தில் வந்து அவருடைய சீஷரிற் சிலர் கை கழுவாமல் அசுத்தமான கைகளோடே போசனம்பண்ணுகிறதைக் கண்டபொழுது அவர்கள் அவரை நோக்கி உம்மு

டைய சிஷர் பெரியோருடைய பாரம்பரை
நியாயத்தை மீறி நடந்து கைகழுவாமற்போ
சனம்பண்ணுகிறதென்னவென்று கேட்டார்க
ள். அதற்கு மாறுத்தரமாக அவர் சொன்னது
நீங்கள் பராபரனுடைய கட்டளையை விட்டுக்
குடங்களையும் சலபாத்திரங்களையும் ஸ்நானம்
பண்ணுவித்து மற்றும் அப்படிப்பட்ட பார
ம்பரை நியாயங்களைக் கைக்கொள்ளுகிறீர்க
ளே. ஆகையால் இந்தச் சனங்கள் உதடுகளி
னாலே என்னைக்கனம்பண்ணியும் இவர்களுடை
ய இருதயமெனக்குத் தூரமாய் விலகியிருக்கி
றதென்றும் மனிதர்களுடைய கற்பனைகளாகி
ய உபதேசங்களை இவர்கள் கற்றுக்கொண்டு
வீணாய் எனக்கு ஆராதனைசெய்கிறார்களென்று
ம் எசாயாவென்பவன் மாயக்காரராகிய உங்க
ளைக் குறித்து நன்றாய்த் தீர்க்கதரிசனஞ்சொல்
லி இருக்கிறானென்று சொல்லிப் பின்பு உங்க
ள் பாரம்பரை நியாயங்களைக் காத்துக்கொள்
ளும்படிக்கு நீங்கள் பராபரனுடைய கட்டளை
யைத் தள்ளிக்கொண்டு வருகிறது நன்றாயிரு
க்கிறது. என்னவென்றால் உன் தகப்பனையும்
உன் தாயையுங் கனம்பண்ணுவாயாகவென்றுந்
தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவனு
க்கு மரண ஆக்கினையைக்கொடுக்கவேண்டுமெ
ன்றும் மோசே சொன்னாரே. நீங்கள் ஒருவன்
தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி
உங்களுக்கு என்னாலே உதவுகிறதேதோ அது
தேவாலயத்திற்குக் காணிக்கையாகிய கொர்பா
னாவதாகவென்று சொன்னாற் பின்பு அவன் தன்

நகப்பனுக்குந் தன் தாய்க்கும் உதவிசெய்ய
வேண்டுவதில்லையென்று உத்தரவு கொடுத்து
இவ்விதமாய் உங்களால் உண்டாக்கப்பட்ட பா
ரம்பரை நியாயத்தினாலே பராபரனுடைய வச
னத்தை அவமாக்குகிறீர்கள். அதுபோல நீங்
கள் மற்றும் அனேகங் காரியங்களையும்செய்
கிறீர்களென்று சொல்லிப் பின்பு எல்லாச் சன
ங்களையும் அழைத்து அவர்களுடனே சொ
ன்னது, நீங்கள் எல்லாரும் எனக்குச் செவி
கொடுத்துச் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

ஒரு மனிதனுக்குப் புறம்பேயிருக்கிற எந்த
ப்பொருளும் அவனுக்குட் பிரவேசிக்கிறபொ
ழுது அவனை அசுசிப்படுத்தமாட்டாது. அவ
னுள்ளத்திலிருந்து புறப்படுகிறபொருள்களே
அவனை அசுசிப்படுத்துகின்றன. கேட்கிறதற்
கு ஒருவன் காதுள்ளவனானாற் கேட்கக்கடவ
னென்றார். பின்பு அவர் சனங்களைவிட்டு வீட்
டிற் பிரவேசித்தபொழுது அவருடைய சீஷர்
கள் அந்த உவமையைக் குறித்து அவரிடத்தில்
வினாவினார்கள். அவர்களுடனே அவர் சொன்
னது நீங்களும் புத்தியில்லாதவர்களா? புறம்
பேயிருக்கிற எந்தப் பொருளும் மனிதனுக்கு
ட் பிரவேசிக்கிற பொழுது அவனை அசுசிப்ப
டுத்தமாட்டாதென்று நீங்களும் அறிந்திருக்க
வில்லையா? அது அவனுடைய இருதயத்திலே
பிரவேசியாமல் வயிற்றிற் பிரவேசிக்கிறதே அ
திலிருந்து எல்லாப்போசனங்களையுங் கழிக்கிற
ஆசனவழியாய்ப் புறப்படுகின்றன. மனிதனு
டைய உள்ளத்திலிருந்து புறப்படுகிறதே அவ

னை அசுசிப்படுத்துகின்றது. அதெப்படியெ
னில் மனிதருடைய இருதயத்திலிருந்து விப
சாரம், வேசைத்தனம், கொலை, திருட்டு, தகா
த பொருளாசை, மூர்க்கம், கபடம் காமவிகா
ரம், பொறாமை, தூஷணம், அகந்தை, மதி
கேடு என்பவைகளுக் கேதுவான பொல்லாத
யோசனைகள் புறப்படுகின்றன. தீமையான இ
வைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு
மனிதனை அசுசிப்படுத்துகின்றன வென்றுந் தி
ருவுளம்பற்றினார்.

இதுவுமன்றி ஒருவனுக்குக் கிறிஸ்துவின் ஆவி
யில்லாதிருந்தால் அவன் அவருடையவனல்லவெ
ன்றுங் கிறிஸ்து யேசுவிலுள்ள சிந்தையே உங்
களிலும் இருக்கக்கடவதென்றுஞ் சொல்லியி
ருக்கிறதே. அப்படியிராவிட்டால் நம்மைக் கி
றிஸ்தவர்களென்றுசொல்லக்கூடாதே. இன்னு
ம், கொலோசர். ௩. அதி. ௰௨, ௰௩. வசனங்கள்
நீங்கள் பராபரனாலே தெரிந்துகொள்ளப்பட்
டவர்களாயும் பரிசுத்தராயுஞ் சிநேகிக்கப்பட்
டவர்களாயும் இருக்கையால் உருக்கமான இரக்
கத்தையும் தயையையும், மனத்தாழ்மையையு
ம், பொறுமையையும், நீடியசாந்தத்தையுந் தரி
த்துக்கொண்டு ஒருவரை ஒருவர் தாங்கி ஒருவ
ன் மற்றொருவன்மேல் விசனமாயிருந்தாற் கிறி
ஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களு
மொருவர்க்கொருவர் மன்னியுங்கள். அன்றியு
ம், அவைகளெல்லாவற்றின்மேலும் அன்பைத்
தரித்துக்கொள்ளக்கடவர்களென்றும், பிலிப்பி
யர், ௨. அதி. ௨. நீங்கள் ஒரேவிதமாய்ச் சிந்த

ணைப்பண்ணிக்கொண்டு ஒரேவிதமான அன்புள்
ளவர்களாய் இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்
றையே சிந்தித்துக்கொண்டு இப்படி என் ச
ந்தோஷத்தை நிறைவேற்றுவீர்களாக. ஒன்
றையும் நீங்கள் வாதத்தினாலே அல்லது வீண்
பெருமையினாலே செய்யாமல் மனத்தாழ்மை
யினாலே ஒருவரை யொருவர் தங்களிலும் மே
ன்மையானவர்களென்று எண்ணிக்கொள்வீர்க
ளாக. அவரவர் தங்களுக்கானவைகளை மாத்
திரமல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவீர்
களாக. கிறிஸ்துயேசுவிலுள்ள சிந்தையே உங்
களிலுமிருக்கக்கடவது.

இப்படிப்பட்ட அன்பினாலும் மனத்தாழ்
மையினாலுங் கிறிஸ்தவர்கள் ஒருமைப்படவே
ண்டும். யோவான். ௰௭. அதி. ௨௧—௨௩ம்.
வசனம் மட்டாக இந்த ஒருமையைக் குறித்து
யேசுநாதர் பரம பிதாவை நோக்கி நீர் என்னி
லேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல
அவர்களும் நம்மில் ஒன்றாயிருக்கும்படிக்கு
வேண்டிக்கொள்ளுகிறேன். அல்லாமலும் நா
ம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்
றாயிருக்கும்படிக்கு நீர் எனக்குக் கொடுத்தம
கிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.
அப்படியே அவர்கள் ஒருமைப்பாட்டிலே நி
றைந்தவர்களாயிருக்கும்படிக்கும் நீர் என்னை
அனுப்பினதையும் நீரென்னிடத்தில் அன்பு கூ
ருகிறதுபோல அவர்களிடத்திலும் அன்பு கூரு
கிறதையும் உலகத்தார் அறியும்படிக்கும் நா
ன் அவர்களிலேயும் நீர் என்னிலேயுமிருக்கவே

ண்டுமென்றார். கொலோசர். ௩. அதி. ௰௧.
வசனத்திலே பவுலென்னும் அப்போஸ்தலனு
ம் கிறிஸ்தவர்களுக்குள்ளே கிரேக்கனென்று
ம் யூதனென்றும் விருத்தசெதனமுள்ளவனெ
ன்றும் விருத்தசேதனமில்லாதவனென்றும் பு
றத்தேசத்தானென்றும் இஸ்கீத்தனென்றும்
அடிமையென்றும் சுயாதீனனென்றும் சொல்
லப்பட்ட வேற்றுமையில்லை. கிறிஸ்துவே எல்
லாருக்குள்ளும் எல்லாமுமாய் இருக்கிறார் என்
று சொன்னார். முந்தின கிறிஸ்தவர்களும் அ
ன்பும் மனத்தாழ்மையும் ஒருமையுமுள்ளவர்
களாயிருந்தார்கள். இப்பொழுது மெய்யான
கிறிஸ்தவர்கள் அப்படியிருப்பார்கள். அப்படி
யே யேசுநாதருடைய செய்கைகளினாலும் அ
வரும் அவர் தெரிந்துகொண்ட அப்போஸ்தல
ரும் சொன்ன வசனங்களினாலும் அன்பு மனத்
தாழ்மை ஒருமைப்பாடு முதலிய நற்குணங்க
ளை அடைந்து அவைகளுக்கு இசைய நடக்க
வேண்டிய கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகளுக்குள்
ளே வழங்குகிற சாதிபேதம் பார்க்கும் முறை
யைக் கைக்கொள்ளப்படாது. அகந்தை பொ
றாமை மனப்பேதகம் முதலான தீக்குணங்களை
உண்டாக்குகிற சாதிவேற்றுமைபார்க்குந்தன்
மையை எவ்விதத்திலுந் தள்ளவேண்டும். நான்
சூத்திரன் நீ பறையன் ஆகையால் நான் உன்னு
டனே சாவகாசம்பண்ணக் கூடாது. நீ கொண்
டுவந்த தண்ணீரை நான் பானம்பண்ணக் கூ
டாது. நீ என்னுடைய பாண்டங்களைத் தொடக்
கூடாது என்று கிறிஸ்தவர்கள் ஒருவரோடொ

ருவர் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்லி
நடக்கிறவனை அன்பும் மனத்தாழ்மையுமுள்ள
வனென்று சொல்லக்கூடாது. அன்பானது வீ
ம்பு சொல்லாது. இறுமாப்பாயிராது. ஆகை
யாற் சாதிபேதம்பார்ப்பது கிறிஸ்துநாதரு
டைய சுவிசேஷத்துக்குத் தகாததாயிருக்கின்
றது. இங்கே சொல்லப்பட்ட வசனங்கள் எல்
லாம் சாதிவேற்றுமைபார்க்குதல் ஆத்துமாக்
கள் கதியேறத் தகுந்ததல்லவென்றும் அவர்க
ள் மனத்தாழ்மை பொறுமை சினேகஞ் சாந்த
ம் இரக்கம்முதலிய நற்குணங்களை உடையவர்க
ளாயிருக்கவேண்டுமென்றும் ஆங்காரம் வீம்பு
மகத்துவம் பொருமை முதலிய தீக்குணங்க
ளைத் தடிந்து அடக்கி நடக்க வேண்டுமென்று
ங்காட்டுகின்றது. இப்படியிருக்கத் தங்களைத்
தாங்கள் உயர் குலத்தாரென்றும் மகத்துவமு
டையவர்களென்றும் ஆங்காரங்கொண்டு மற்
றவர்களை இகழ்ந்து நிந்தித்துத் தாங்கள் இழிந்
த வருணத்தாருடைய போசனபான பாத்திரா
திகளையும் பூஷணாதிகளையுந் தெரிசிக்கப் பரிசிக்
கப்பூசிக்க நேசிக்கத்தகாதென்று சொல்வதும்
அவர்கள் வேதாகம புராணாதிகளை வாசிக்கக்
கேட்க அதின்வழி நிற்கவுந் தங்களைப் போலத்
தேவாராதனைபண்ணவுந் தகாதெனக்கூறி மறு
த்து அவர்களுக்குத் தாங்கள் நம்புகிற மோட்
சவழியைத் தடுத்து மறிப்பது நீதியோ! இரக்
கமோ! இப்படிச் செய்வது சருவ சிருட்டிக
ராகிய கத்தாவுக்கு ஏற்குமோ? இந்தக் கருத்
து மேலேகாட்டியவசனங்களுக்கொக்குமோ!

ஒவ்வாதே பின்னைக் கிறிஸ்துமார்க்கத்தின் வழி ஒழுகுகிறோமென்றுஞ் சத்தியவேதப் பிரமாணத்தைக்கையேற்று அதின்படிநடக்கிறோமென்றுஞ்சொல்லித் தங்கள்பாரம்பரை நியாயமாகிய சாதிவித்தியாசத்தை மெய்யென்று கைக்கொண்டுவருகிற சகலருங் கிறிஸ்து வேதத்துக்குங் கிறிஸ்துநாதருக்கும் அவராலே இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் விரோதமாய்நடக்கிறார்கள். இவர்கள் தெய்வபத்தியுள்ள கிறிஸ்தவர்களை இழிகுலமென்று தூஷணிப்பது அவர்களை மீட்டுக்கொண்ட யேசுநாதரைத் தூஷணிக்கிறதாம். அவர்களுடனே போசனபானம்பண்ணத் தகாதெனத் தள்ளுவது அவருடனே பந்தியிருக்கத் தகாதெனத்தள்ளுவதாம். இப்படியிருக்கையாற் சாதிவேற்றுமையைக் கைக்கொள்வது சத்தியவேதத்துக்கு விரோதமென்று அறிந்து கிறிஸ்துநாதருடைய நடையைப் பின்பற்றி நடக்கக்-கடவர்கள்.

---

௯வது. சாதிவித்தியாசம் பார்ப்பது ஆத்தும ரட்சிப்புக்கு நட்டமென்பது.

“யோவான். ௰௩. அதி. ௩௪. வச. நான் உங்களிடத்திலன்புகூர்ந்திருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்,,
“யோவான். ௰௫. அதி. ௧௨, ௧௭. வச நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களிடத்தில் அன்பாயிருந்ததுபோலநீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்களென்று புதி

நான் கற்பனையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் நீங்கள் என்னுடைய சீஷரென்று எல்லாரும் அறிவார்களென்றார்,,

"இப்படி நம்முடைய இரட்சகர் சொல்லியிருக்க நீங்கள் சாதிபேதம் பார்த்து அகந்தைகொண்டு நடந்தால் நீங்கள் யேசுநாதருடைய சீஷராயிருக்க மாட்டீர்கள். உங்கள் ஆத்துமாக்களுக்கு அதினாலே நட்டமுண்டாகுமேயன்றி யாதொரு பிரயோசனமும் வரமாட்டாது.

"லூக்கா. ௰௪. அதி. ௨௬, ௨௭. ஒருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையுந் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையுஞ் சகோதரரையுஞ் சகோதரிகளையுந் தன் சுய ஜீவனையும் பகையாவிட்டால் என்சீஷனாயிருக்கமாட்டான் அல்லாமலுந் தன் சிலுவைமரத்தைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் என் சீஷனாயிருக்கமாட்டான்,

"௧. பேதுரு. ௫. அதி. ௫. வச. அல்லாமலும் வாலிபரே மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்துகொள்வீர்களாக. அகந்தையுள்ளவர்களுக்குப் பராபரன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கே கிருபை அளிக்கிறார்.

"மத்தேயு. ௰௮. அதி. ௩. வச. நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போலாகாவிட்டாற்பரலோக இராச்சியத்திற் பிரவேசிக்கமாட்டீர்க

னென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லு
கிறேன்.

குழந்தைகளுக்குள்ளே சாதிவேற்றுமை பா
ர்க்கிற குணமிருக்குமோ? இருக்கமாட்டாதே
யின்னே நீங்களும் அப்படி இராமற் கிறிஸ்து
மார்க்க முறைகளிற் சிலவற்றையும் அஞ்ஞான
நெறிகளிற் சிலவற்றையுங் கைக்கொண்டு நடந்
து அசுத்தையாயிருந்தால் உங்களுடைய ஆத்
துமாவுக்கு நட்டம்வராமலிருக்குமா? அப்ப
டிப்பட்ட மனசு உங்களுக்கிருந்தால் நீங்கள் ச
ந்தோஷத்தோடே யேசு இரட்சகரை நோக்கி
வேண்டுதல்பண்ணுகிறதற்கு மனமிருக்கமாட்
டாதே. அல்லாமலும் உங்களுக்கு அவர் தம்
முடைய அன்பையுஞ் சமாதான சவுக்கியத்
தையும் அனுபவிக்கக் கொடாமல் உங்களைக் க
க்கிப்போடுவோமென்று. அறிவிப்பு. ௩. அதி.
௰௬ம். வசனத்திற் சொன்னதைச் சிந்தித்
துப் பாருங்கள். அல்லாமலும் யாவரும் வெ
ளிப்படையாய்க் காணக் கிறிஸ்து மார்க்கத்தி
லே முன்னேறி நடந்து அன்பு மனத்தாழ்மை
முதலான நற்குணங்களை அதிகமதிகமாய் அ
டைந்து அறிவிலும் பத்தியிலும் முதிர்ந்தவர்க
ளாயிருக்கவேண்டும். சாதி வேற்றுமை பார்த்
து நடக்கிறவர்கள் அப்படிக் கிறிஸ்துமார்க்க
அனுசாரத்திலே தேறி முதிர்ந்தவர்களாய் இரு
க்கக் கூடியதல்ல. அன்பம் குறைவாய்ப்போ
ம். அதினாலே உங்கள் ஆத்துமாவுக்கு நட்டமு
ண்டாகிறதுமாத்திரமல்லாமல் நீங்கள் சாதி
பேதத்தினாலே மற்றக்கிறிஸ்தவர்களை அசட்

டைபண்ணி அசுத்தரென்றெண்ணி அவர்களு
க்குத் திக்கம்வரப்பண்ணுகிறதினாலே உங்களை
க் கிறிஸ்தவர்களென்றெண்ணியிருந்தவர்களும்
நீங்கள் அன்பற்ற அஞ்ஞானிகளைப்போலேதா
ன் இருக்கிறீர்களென்று விதனப்படுவார்கள்.
அதைவிட மற்றக்கிறிஸ்தவர்களும் அஞ்ஞானிக
ளைப்போல நடக்க எண்ணுவார்கள். இப்படி
யே உங்களாத்துமாக்களுக்கும் மற்றவர்களு
டைய ஆத்துமாக்களுக்கும் உங்களாலே நட்ட
ம் வருவதுமாத்திரமல்ல அஞ்ஞானிகளுக்கும்
நட்டம்வரும். எப்படியென்றால் நீங்கள் யேசு
நாதருடைய சுவிசேஷத்தின்படியே ஒரேமன
ப்பட்டு அன்பும் மனத்தாழ்மையுமுள்ளவர்க
ளாகநடந்துவருகிறதை அஞ்ஞானிகள் கண்டா
ல் இந்தக் கிறிஸ்தவர்கள் ஒருவரிலொருவர் எ
வ்வளவு அன்பாயிருக்கிறார்களென்று ஆச்சரிய
த்தோடே சொல்லி அவர்களுங் கிறிஸ்துமார்க்
கத்திற் சேர்வார்கள். நீங்கள் ஒருவரிலொருவர்
அன்பாய் நடவாமற் சிலரை ஏற்றசாதியென்று
ஞ் சிலரை அன்னியசாதியென்றும் வித்தியாசம்
பார்த்து நடந்தால் அவர்கள் இந்த மார்க்கத்தி
ற்சேராமற் றடைபட்டிருப்பார்கள். மேலும்
நீங்கள் சிலரைக் கீழ்சாதியென்று சொல்லி அ
சட்டைபண்ணும்பொழுது அவர்களோடேகூ
டி ஒருமித்துப் பராபரனுக்கேற்ற வேண்டுத
ல்பண்ணக்கூடாதே அதினாலேமற்றவர்கள் இ
ரட்சிப்பைத் தேடாமற் றடைபட்டுப் போ
வதுமல்லாமற் கீழ்சாதியானவர்களை நீங்கள் அ
ருவருத்துத் தள்ளும்பொழுது அவர்களுக்காக

உருகவும் அவர்களுக்குச் சுவிசேஷித்தை அறி
விக்கவுங் கூடுமோ? இல்லையே. ஆகையாற்கிறிஸ்
துநாதர் நீங்கள் ஒருவரிலொருவர் அன்புகூ
ருவீர்களானால் உலகத்தார் உங்களை என்னுடை
ய சீஷர்களென்றறிந்திருப்பார்களென்று சொ
ன்ன வசனத்தை நினைத்துச் சாதிவேற்றுமை
பார்ப்பதைத் தள்ளக்கடவீர்கள். அதைப் பா
ராதிருந்தால் உலகத்தார் எங்களை நிந்திப்பார்க
ளென்று சொல்லுகிறீர்கள். அப்படி யேசுக்கி
றிஸ்துவினிமித்தம் நீங்கள் சாதிவேற்றுமையை
த் தள்ளுகிறபொழுது உலகத்தார் உங்களை நிந்
தித்தாலுமென்ன? விசனப்படவேண்டாம். கி
றிஸ்துநாதரையும் நிந்தித்தார்களல்லவோ. பே
துருஅப்போஸ்தலன் தனது, க. நிருபத்து. ச.
அதி. யக. வசனத்திலே நீங்களும் அப்படிப்ப
ட்ட நிந்தையைக் குறித்துப் பராபரனைத் தோ
த்திரஞ் செய்யவேண்டுமென்று சொல்லுகி
றார். எக்காலத்திலேயும் மெய்க்கிறிஸ்தவர்கள்
உலகத்தாருடைய பொல்லாத வழக்கத்தின்படி
நடவாமல் அவருடைய கட்டளையின்படி நடப்
பதினால் உலகத்தாராலே துன்பப்படுவார்களெ
ன்பதை அறிந்து யேசுநாதர் தமதுசீஷருடனே
என்னிமித்தமுந் நீதியினிமித்தமுந் துன்பப்ப
டவந்தாற் சந்தோஷிப்படுங்கள். உங்களுக்கு
அதனால் வரும்பலன் பெரிதாயிருக்கின்றதெ
ன்றார்.

"மத்தேயு. ௬. அதி. யக. வச. என்னைப்
பின்பற்றி நடக்க ஒருவன் விரும்பினாற் றன்னை
த்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்து

க்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவான் என்று திருவுளம்பற்றினர். ஆதலால் நீங்கள் முதலாவது யேசுநாதரை அண்டிக்கொண்டு அவருடைய கட்டளைகளின்படி நடந்து அவர் உங்களில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் மற்றவர்களில் அன்புகூர்ந்து மனத்தாழ்மையாய் நடக்கக் கடவீர்கள். அதைக் குறித்து உலகத்தார் உங்களை நிந்தித்து உபத்திரவஞ் செய்தால் அதைக் கருத்தாவுக்கே சொல்லி முறையிட்டு வேண்டுதல்பண்ணவேண்டும். சைவசமயத்தாருக்குள் ஞானிகளென்னப்பட்டவர்கள் சாதிவேற்றுமைபாராமல் எந்தச் சாதியாரையும் ஏற்றுக்கொண்டு போசனபானம் பண்ணுகிறதுமல்லாமற் பசிகண்டபொழுதே அகப்பட்ட போசனத்தைச் சாப்பிடுவார்கள். விருப்பத்தோடே எவன் கொடுப்பானோ அதை ஏற்றுக்கொள்வார்கள். ஆருடைய வீட்டில் நித்திரை செய்யவேண்டிவந்ததோ அந்த வீட்டிலே நித்திரைசெய்வார்கள். இப்படியே சத்தியவேதத்தை அறியாதவர்கள். தங்கள் மன நியாயத்தின்படி செய்திருக்கச் சத்தியவேதத்தை அறிந்தவர்களாயும் மெஞ்ஞானிகளாயும் அவர்களை அஞ்ஞானிகளென்று சொல்லுகிறவர்களாயும் இருக்கிற நீங்கள் அவர்களைப் போலாகிலும் நடக்கவேண்டாமா?

"யாக்கோபு. உ. அதி. உ-அ. வச. மட்டும் அதெப்படியெனிற் பொன் மோதிரத்தையும் பிரகாசமுள்ள வஸ்திரத்தையுந் தரித்திருக்கிற ஒரு மனிதனுங் கந்தையான வஸ்திரத்தைத் தரி

இருக்கிற ஒருதரித்திரனும் உங்கள் செப ஆலய
த்திற் பிரவேசிக்கும் பொழுது பிரகாசமுள்ள
வஸ்திரத்தைத் தரித்தவனை வணக்கமாய் நோ
க்கி நீர் கனமாய் இவ்விடத்தில் உளுக்காருமெ
ன்றுந் தரித்திரனை நீ அங்கே நில்லு அல்லது இ
ங்கே என் பாதபடியினிடத்திலே உளுக்காரு
என்றுந் நீங்கள் சொன்னால் உங்களுக்குள்ளே
பேதகம்பண்ணித் துற்சிந்தனைகளோடே நி
யாயாதிபதிகளாவீர்கள் அல்லவா? எனக்குப்
பிரியமான சகோதரரே கேளுங்கள் விசுவாச
த்தில் ஐசுவரியவான்களாகவுந் தம்மிடத்தில் அ
ன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்
பண்ணின இராச்சியத்தைச் சுதந்தரிக்கிறவர்க
ளாகவும் இவ்வுலகத்தின் தரித்திரரைப் பராப
ரன் தெரிந்துகொள்ளவில்லையா? அப்படியிரு
ந்தும் நீங்கள் தரித்திரனைக் கனவீனம்பண்ணிவ
ருகிறீர்கள்? ஐசுவரியவான்களல்லவோ உங்களை
ஒடுக்குகிறார்கள்? அவர்களல்லவோ உங்களை
நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்க
ள். அவர்களல்லவோ உங்களுக்குக் கொடுக்க
ப்பட்ட நல்லநாமத்தைத் தூஷிணிக்கிறார்கள்.

"உன்மேல் அன்பாயிருக்கிறதுபோலப் புற
னிடத்திலேயும் அன்பு கூருவாயாகவென்று
வேதவாக்கியஞ் சொல்லுகிற இராசரீகமான
பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்
மைசெய்வீர்களென்று சொல்லுகிறார். அல்லா
மலும் சாதிவேற்றுமை பார்த்து நடந்து மற்
றவர்களுக்கு அன்பும் மனத்தாழ்மையுமுள்ள
வர்களாய் இருக்கலாமோ? நாம் வசனத்தினு

லும் நாவினாலுமல்ல கிரியைகளினாலும் உண்மையினாலும் அன்புகூரக் கடவோமென்று அப்போஸ்தலனாகிய யோவான் முதலாம் நிருபத்து மூன்றாம் அதிகாரம். ௰அம். வசனத்திற் சொல்லுகிறான். உ. கொரிந்தர். ௬. அதி. ௰௪—௰அ. மட்டும். அப்போஸ்தலனாகிய பவுலும் நீங்கள் ஒரே நுகத்திலே அவிசுவாசிகளுடனே பூட்டப்படாதிருப்பீர்களாக. என்னத்தினாலெனில் நீதிக்கும் அக்கிரமத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இருளுக்கும் ஒளிக்கும் ஐக்கியமென்ன? கிறிஸ்துவுக்கும் பசாசுக்கும் இசைவுண்டா? அல்லது அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்குண்டா? விக்கிரககோவில்களுக்கும் பராபரனுடைய ஆலயத்துக்கும் சம்பந்தமுண்டா? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே நடந்துகொண்டு அவர்களுடைய தேவனாயிருப்பேன் என்றும் அவர்கள் என்னுடைய சனங்களாயிருப்பார்களென்றும் பராபரன் சொன்னபடி நீங்கள் சீவனுள்ள பராபரனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே ஆனபடியினாலே நீங்கள் அவர்களிடத்தில் இருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் அப்பொழுது நான் உங்களை அங்கிகரித்துக்கொண்டு உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரருமாய்க் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சருவவல்லமையுள்ள பராபரன் சொல்லுகிறாரென்றார். முக்கியமான இந்தவசனங்களைநன்றாய்ச் சிந்தித்துக் கொள்ளக்கடவீர்கள்

இதுவுமன்றி இத்தேசத்தார் தங்கள்வமிசத்துக்குள்ளே விவாகம்பண்ணுவதும் அவர்களோடே போசனபானம்பண்ணுவதும் அவர்களோடேமாத்திரம் ஐக்கியமாயிருப்பதும் பெரிய வழக்கமாய் இருக்கின்றது. அப்படியிருந்தாலும் நமக்குச் சகோதரராயும் நம்முடைய ஒரே பிதாவின் புத்திரராயும் நம்மைப்போலப் பிதாக்கொடுக்கிற உரிமைச் சுதந்தரத்திற்குப் பங்குள்ளவர்களாயும் இருக்கிற கிறிஸ்தவர்களோடே உண்டு உடுத்து அவர்களுக்குள்ளே கொள்வனவு கொடுப்பனவுபண்ணி அவர்கள் எல்லாரும் ஐக்கமாயிருப்பதற்குத் தடைசொல்ல நியாயங்காணாது. இதற்குதாரணமாகக் கிறிஸ்துநாதரைத்தேடி அவருடைய தாயுஞ் சகோதரரும் வந்தபொழுது அவர் தமதுகையைச் சீஷர்மேல் நீட்டி இவர்கள்தான் எம்தாயுஞ் சகோதரருமாயிருக்கிறார்கள். பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனெவனோ அவனே என் தாயுஞ் சகோதரனும் சகோதரியுமாயிருக்கிறார்களென்றார். இந்தப்பிரகாரமாக எந்தச்சாதியாயிருந்தாலும் பரமபிதாவின் சித்தத்திற்கு இணங்கிக் குணப்பட்டுக் கிறிஸ்தவர்களாய் நடக்கிறவர்களே எங்கள் சாதியாயும் பிதாமாதாச் சகோதரருமாய் இருக்கிறார்களென்று எண்ணி யாதொருவேற்றுமையில்லாமல் அவர்களை ஏற்றுக்கொண்டு மன அன்போடே நடக்கக்கடவோம்.

இத்தேசத்தின் சாதிவேற்றுமைக்கு ஒப்பாக முற்காலத்திலும் யூதர்களென்றும் அக்கியா

னிகளென்றுஞ் சமாரியரென்றும் ஆயக்கார
ரென்றும் பரிசேயரென்றும் வேற்றுமை உ
ண்டாயிருந்தது. இயேசுரட்சகரோ சாதி பேத
ம்பாராமல் எவர்களுடனேயும் சேர்ந்து போ
சனபானம்பண்ணிக் கொண்டாட்டமாய் நடந்
து வந்தார். அப்படியே அப்போஸ்தலரும் ப
லசாதியாரோடுஞ் சேர்மானம்பண்ணி அவர்க
ளோடே உண்டு உடுத்து அந்தந்த இடங்களுக்
கேற்ற தொழில்களையுஞ் செய்துகொண்டு வந்
தார்கள். நீங்களும் அப்படியே யேசுநாதரை
ப் பின்பற்றவும் அவர் நிமித்தமாகச் சந்தோஷ
த்தையாவது அசந்தோஷத்தையாவது அநுப
விக்கவும் சகல அக்கிரமங்களையும் பகைத்து
அவருடைய வசனத்தின்படியே நடக்கவும் அ
வர் எப்படியுங் காப்பாற்றுவாரென்று உறுதி
யாய் நம்பி அவருடைய சித்தத்தின்படி செ
ய்வது உங்கள் பிரதான பாக்கியமென்றெண்
ணவேண்டியதல்லவா! உத்தர இந்துதேசத்தி
லே அனேக பிராமணரும் மற்றுஞ் சாதியாரு
ஞ் சாதிவேற்றுமை தள்ளினவர்களாயிருக்கிறார்
கள். அவர்களுடனே மற்றவர்கள் சாப்பிடவும்
சம்பந்தம்பண்ணவும் மாட்டார்கள். ஆகிலும்
அவர்களை மிகவுங் கனம்பண்ணி அவர்களாலே
இயாதொரு நன்மைபெற விரும்புகிறார்கள்.
அப்படியிருப்பதினாற் கிறிஸ்தவர்களாகிய நீங்க
ள் இயேசுநாதருடைய சுவிசேஷத்தின்படி அ
நியாயமில்லாமற் சீவனம்பண்ணி எவ்விதத்தி
லும் புண்ணியசாலிகளாயிருந்தால் நீங்கள் சா
திவேற்றுமை பார்ப்பதைத் தள்ளிநடந்தாலும்

மற்றவர்கள் உங்களைக் கனம்பண்ணாமல் விட
மாட்டார்கள். அப்படிக் கிறிஸ்த்தவர்களுக்கு
ள்ளே இயாதொரு வேற்றுமையும் இருக்கவில்
லையோவெனில் வறுமையும் ஐசுவரியமும் கல்
வியும் கல்லாமையும் முதுமையும் இளமையும்
உலகத்திற்கு இயல்பாயிருக்கையால் அவைகளி
னால் உண்டாகிற வேற்றுமைப்படி எசமான்க
ளுக்கு வேலைகாரரும் குருவுக்குச் சீஷரும் தா
ய்தந்தைக்குப் புத்திரரும் இராசாக்களுக்குக்
குடிகளும் இப்படியே கனத்திலும் அதிகாரத்
திலும் வயதிலும் விருத்தராயிருப்பவர்களுக்கு
க்கீழ்ப்படிவது உலகத்திற்கு இயல்பானதாயும்
சுவிசேஷத்துக்கு ஏற்றதாயும் இருக்கின்றது. இ
ப்பொழுது சொல்லிய இந்த வேற்றுமைகளு
ம் இத்தேசத்தாருடைய சாதிவேற்றுமையும்
சரியானவைகளல்ல; சாதிவேற்றுமை கருத்தா
வாலே விதிக்கப்பட்டதுமல்ல அவருடைய
சுவிசேஷத்துக்கேற்றதுமல்ல ஆத்தும ரட்சி
ப்புக்கு வேண்டியதுமல்ல சரீரசுகத்துக்குத்
தகுதியுள்ளதுமல்ல. கல்விமுதலியவைகளோ
அவராலே இடப்பட்டதாயும் உலகவொழுக்க
த்துக்கு வேண்டுவதாயும் இருக்கின்றது. இ
வைகளினாலே நீங்கள் கைக்கொள்ளுகிற சாதி
வேற்றுமையும் நாங்கள் செய்கிற கணிசமும் ஒ
ன்றல்லவெனக் கண்டு சாதி வேற்றுமைக்கட்
டையறுத்து சத்தியவேதங் கற்பிப்பது போ
ல யாவருக்கும் அன்புள்ளவர்களாய் மற்றவர்
களை உங்களிலும் அதிகமாய் மதித்து நடக்கக்
கடவீர்கள். அப்பொழுது உலகத்தாரால் நே

சிக்கப்பட்டவர்களாயும் இருப்பீர்கள்.
கிறிஸ்துநாதர் உலகத்திலிருந்தபொழுது ச
கலகுலத்தாருடைய வீடுகளுக்கும் போய் அவ
ரவர்களுடனே போசனபானம்பண்ணி அவர்
களுக்குச் சுவிசேஷத்தைப் போதித்துவந்தார்.
அப்பொழுது இந்துமதக்காரரைப்போலத் த
ற்புகழ்ச்சியும் பெருமையுங்கொண்டிருந்த யூ
தர் அவரைவெறுத்து நிந்தித்துத் தூஷணித்தா
ர்கள். அதற்கு அவர் பிணியாளிகளுக்கு வைத்
தியன் தேவையே அல்லாமற் சுகமுள்ளவர்களு
க்கு வைத்தியன் தேவையில்லையென்றும் நா
ன் பாவிகளை இரட்சிக்க வந்தேனேயென்றுஞ்
சொன்னார். அவர் எளியவர்களுக்கு எளியவ
ராயும் பெரியவர்களுக்குப் பெரியவராயும் நட
ந்ததேதென்றால் தாமொரு மகத்துவமுடைய
வராய்மாத்திரம் இருந்தால் எளியவர்கள் அவ
ரை அண்டிக்கொள்ளவும் அவருடைய போத
கத்தைக் கேட்கவும் அவரிடத்திற் பாவப்பொ
றுதிபெற்றுக்கொள்ளவும் வந்தடையமாட்டா
ர்கள். சிறியவராய்மாத்திரம் இருந்தாற் பெரி
யோர்கள் வந்தடைந்து பாவவிமோசனமடை
யமாட்டார்கள். இதனால் அவர் ஒவ்வொருவரு
க்கும் ஏற்ற ஏற்ற தன்மையைக்கொண்டிருந்தா
ர். அப்படியே அவருடைய அப்போஸ்தலரு
ம் ஒவ்வொருவருக்குமேற்ற ஏற்ற தன்மைய
க் கொண்டு நடந்தார்கள். அப்படி அவர்கள்
நடவாதிருந்தாற் கிறிஸ்துவின் சபையை உலக
த்திலே தாபிக்கவும் மாட்டார்கள். சனங்களுக்
கு ஆத்துமரட்சிப்பைக் காட்டவும் மாட்டார்

கள். அப்படியே நடவாத கிறிஸ்தவர்களும் கிறி
ஸ்துநாதர் கற்பித்தபடி தாழ்மை பொறுமை
சாந்தம் தேவநேசம் மனுஷநேசம் முதலிய தே
வபத்திக்கு அடுத்த குணங்களைக்கொண்டிருக்க
க்கூடாது. அதனாற்றங்கள் தங்கள் ஆத்துமாவு
க்கு இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவும்மாட்
டார்கள். இப்படியிருக்கையாற் சாதிவித்தியா
சம்பாரிக்குதல் ஆத்தும இரட்சிப்புக்கு நட்
டத்தை உண்டாக்குமென எவரும் அறிந்து
கொள்ளலாம்.

---

௬வது. சரீரசுகத்துக்கு நட்டமென்பது.

மனிதர் நான் பெரியவன் நீ பெரியவனென்
று அகந்தைகொள்வதினால் ஒருவரிலொருவர்
பொறுமையும் வைராக்கியமும் குரோதமும்
கொண்டு ஒருவரையொருவர் தாழ்த்த நினைத்
து ஒருவர்க் கொருவர் வசைசொல்லிப் பரவ
ணியிலேயுள்ள வடுக்களை எடுத்துப் பேசிச்ச
ண்டையுண்டாக்கி ஒருவரையொருவர் அடித்
து நியாயத்தலங்களிலே போய் வழக்காடி நட்
டமடைகிறார்கள். அதுவல்லாமல் ஒருசாதியார்
மற்றொரு சாதியாருடைய பேசனபானங்களை
யுண்ணவும் பருகவும் தகாதென்று எண்ணியு
ம் ஒருவரொருவருடைய பாண்டங்களைத்தொ
டப்படாதென்று விலக்கியும் வைத்துப் பெரு
மைபாராட்டுகிறதினாலே பிரயாணகாலங்களிற்
றானும் மிகுந்த வருத்தமுண்டாயிருக்கிறது. க
டியதாகம் இருந்தும் அன்னியருடைய கிணற்
றிலே தண்ணீர்குடிக்கமாட்டார்கள் கடியபசி

யிருந்தும் அன்னியருடைய போசனங்களைப் புசிக்கமாட்டார்கள் ஆற வசதியில்லாதிருந்தும் அன்னியருடைய வீட்டிலே தங்கியிருக்கமாட்டார்கள். சமைக்கப் பாண்டம் இல்லாதிருந்தும் அன்னியருடைய பாண்டங்களிற் சமைக்கமாட்டார்கள். அப்படியே அன்னியருக்கும் இவைகளிலொரு சகாயம்பெற்றுக்கொள்ள இடங்கொடுக்கமாட்டார்கள். இதைப்பற்றி வங்காள தேசத்திலிருந்த வேதசாஸ்திரியாகிய இராமோவனராயனென்கிற பிராமணன் இந்த தேசத்தாருடைய சமையாசாரம் முழுவதும் போசனத்தளவிலே தான் யிருந்த வருத்தமான கிரியைமுறைகளை நடப்பிக்க வேண்டியதாயிருக்கின்றது. ஒருவன் இயாதொரு குற்றமுமின்றி நன்னடையுள்ளவனாயிருந்தும் போசனமுறைகளிலே சற்று வழுவினாலும் அவனைச் சண்டாளனென்று நிந்திக்கிறதுமல்லாமல் அவனைத் தங்கள் குடும்பத்திலும் இனத்திலுமில்லாமற் றள்ளிப்போடுவார்கள். இந்தச்சாதியாசாரத்தைமாத்திரம் ஒருவன் கைக்கொண்டுநடந்தால் அவன் வேறென்ன பொல்லாங்குகளைச் செய்தாலும் அவனை ஏற்றுக்கொள்ளுவார்கள். இத்தேசத்து விக்கிரகாராதனைக்காரருக்குள்ளே இந்தச் சாதிவேற்றுமைதானே முக்கியகாரியமாய் இருக்கிறது. ஒருவன் கொலை களவு பொய் வஞ்சனைமுதலிய பொல்லாங்குள்ளவனாய் இருந்தாலும் அவனை அவனுடைய வமிசத்தார் தள்ளிப்போடாமல் ஒருபிராமணனை அழைத்து அவைகள் நிவிர்த்தியாகும்படி பிராயச்சித்தம்

பண்ணுகிறேமென்று சொல்லிக் கொஞ்சப் பொருளைச் செலவிட்டுச் சிலகிரியைகளைச் செய்வித்துக் குற்ற நிவிர்த்தியானானென்று அவனை யேற்றுக்கொள்வார்களென்று எழுதினார்? இந்த சமயக்கட்டு இப்படியிருக்குமாகில் அச்சமயத்தவன் கொலை களவுமுதலிய பாதகங்களுக்கு அஞ்சுவானோ? தனக்கு வைரமுள்ளவனைக் கொன்றும் அவனுடைய பொருளை அபகரித்தும் அற்பபணச்செலவினாலே தன் குற்றத்தை நிவிர்த்தியாக்கி மோட்சமடைவோமென்று துணிந்து பொய் கொலைமுதலிய பாதகங்களைச் செய்வானே. இது உலகத்திலே இருக்கிற சனங்களுடைய சரீரபோஷணத்துக்கு நட்டமாயிருக்கிறதுமல்லாமல் ஆத்துமாவுக்கு நித்திய வேதனையை உண்டாக்கிறதுமாயிருக்கிறது. இது மறுகுலங்களைப் பகைக்கிறதும் தேவசித்தத்தை விரோதிக்கிறதுமாகவே இருக்கிறது. இது தேவனுக்குப்பிரீதியுமல்ல மனிதருக்கு இதமுமல்ல. செல்வரும் உத்தியோகஸ்தரும் கல்விமான்களுமாயிருக்கிற பெரிய மனுஷர் சிறியவர்களாயிருக்கிற மறுகுலத்தாரை இகழ்ந்தும் அவர்களுடைய பொருளை அபகரித்தும் இடுக்கண்படுத்தியும் வருகிறதைக் கருத்தர் கண்டு சிலகாலத்துக்குள்ளாக உயர்ந்தவர்களென்று தங்களை எண்ணிப் பொல்லாங்காய் நடந்த அவர்களை அல்லது அவர்கள்சந்ததியாரைத் தாழ்த்தி நெருக்கிடைப்பட்ட சிறியவர்களை உயர்த்தி இவர்கள் அவர்களை இடுக்கண்படுத்தி இடங்கொடுக்கிறார். சாதி வித்தியாசம் பாராமல் யாவ

ரோடும் சமாதானமாய் நடந்து ஏழைகளுக்கு
ம் விதவைகளுக்குந் திக்கற்ற பிள்ளைகளுக்கும்
உதவிசெய்து வருகிற சாதியாரை வரவரத் தத்
துவத்திலும் சங்கையிலும் செல்வத்திலும் உத்
தியோகங்களிலும் அதிகரிக்கப்பண்ணுகிறார். சா
திவித்தியாசம்பார்த்து ஒருவரையொருவர் நெ
ருக்குகிறவர்கள் வரவரத் தாழ்ந்து தங்களுக்கு
உண்டான சலாக்கியங்களையெல்லாம் இழந்து
போகிறார்கள். இதுவெல்லாம் தேவநீதிஸ்தாப
னமென்று அறியவேண்டும். இப்படித் தேவனு
லே தண்டிக்கப்பட்டும் மற்றும் பலகாரியங்க
ளில் வருத்தப்பட்டும் தாங்கள் கொண்டிருக்கி
ற பெருமையைவிடாமலும் தங்கள் பிறப்பான
வர்களை நேசியாமலும் நடக்கிற அறிமடம் அ
வர்கள் சந்தானத்துக்கு எத்தனைகேடு. இந்தக்
கேட்டின் பாதையிலே நடந்து பெறுகிறபே
றென்ன?

இதுவுமல்லாமல் சாதிவித்தியாசம் பார்க்கி
றவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விவாகம்முடி
க்கவேண்டியபொழுது தேவபத்தியும் நற்கு
ணமும் உள்ளமணவாளப்பிள்ளைகளிருக்க அவர்
கள் இழிகுலமென்று விலக்கிவிட்டு அவபத்தியும்
துற்குணமுமுள்ள உயர்குல மணவாளப்பிள்ளை
க்கு விவாகஞ்செய்கிறார்கள். அதனால் அவர்கள்
சந்தானம் அவபத்தியிலே வளருகுது. இப்ப
டிச்செய்கிறவர்கள் தங்கள் சந்தானத்தை நரக
த்திற் றள்ளுகிறார்களல்லவோ? ஒரே அப்பத்தி
ற் புசித்து ஒரே பாத்திரத்திற் பானம்பண்ணி
னதன் சகோதரனுடைய வீட்டிலே அவன் இழி

குலமென்றதின் நிமித்தம் புசிக்கமாட்டோமென்று பட்டினியாயிருக்கிறது நட்டமல்லவோ? அல்லது தன் சகோதரன் வீட்டைவிட்டு அஞ்ஞானிகளுடைய வீட்டிற்போய்ப் போசனபானம்பண்ணுவது அவனுக்கும். அவன் சகோதரனுக்கும் அவமதியல்லவோ? இப்படிப்பட்ட மதியீனம் இந்தச் சனங்களைவிட்டு எப்பொழுது நீங்குமோ அப்பொழுதே அவர்களுக்குச் சுகமும் இலாபமுமுண்டாகும். சாதிவேற்றுமையை விடாமல் அதைக் கைக்கொண்டு வருங்காலமெல்லாம் அவர்களைப் பிடித்தகேடும் நீங்கமாட்டாது. அன்றியும் அந்தச் சாதியார் செய்துவந்த தொழிலையே அந்தந்தச் சாதியார் செய்யவேண்டுமென்று கற்பித்துக்கொண்டு அந்த வழியாயும் நட்டப்படுகிறார்கள். எப்படியெனில் பிராமணனுக்கு ஏரும் நிலமும் வித்துமிருந்தும் அவர்கள் உழவுதொழிலைச் செய்யப்படாது. வேளாளனுக்குப் புத்தியும் விவேகமுமிருந்தும் அவன் வேதத்தைக் கற்கக்கூடாது. இன்னும் அவனவன் தன்தன் புடைவையை வெளுக்கவும் தன்தனக்குப் புடைவையை நெய்யவும் கம்மாளவேலைசெய்யவுங்கூடாது. இப்படியே அந்தந்தச் சாதியார் அவர் அவருக்கு நியமித்த தொழிலைச் செய்வதே யன்றி மறுசாதியாருடைய தொழிலைச் செய்யக்கூடாது. இதிலும் நட்டத்தை அடைகிறார்கள். இப்படியே சாதிவித்தியாசம்பார்த்தல் பலவிதத்திலும் நட்டமென்றறியலாம்.

---

## ௫வது. சாதிவித்தியாசந் துற்குணத்தை உண்டாக்குமென்பது.

சாதிபேதத்தினாலே உயர்குலத்தாரென்று எண்ணுகிறவர்கள் அகந்தைகொண்டு மறுகுலத்தார் இகழ்ந்து நிந்திக்க இழிகுலத்தார் பொறாமைகொண்டு அவர்களைப் பகைத்து வடுச்சொல்லிக் குறைவாய்ப்பேச இருவரும் வயிரங்கொண்டு ஒருவர்க்கொருவர் கொலை களவு முதலிய பாதகஞ் செய்யத்தக்க குணங்களையுங் கொள்ளுகிறார்கள். உயர் குலத்தார் இழிகுலத்தாரை அவமதியாய் நடத்துகிறதினாலே இழிகுலத்தார் பெருமையடைந்து உயர்ந்தோர் எப்போது தாழ்வார்களென்று காத்திருப்பார்கள். உயர்ந்தோர் இழிந்தோரைக் கனிசத்தப்புப்பண்ணுகிறபடியால் இழிந்தோர் உயர்ந்தோரைக் கனிக்கமாட்டார்கள். உயர்ந்தோர் பந்தியில் முதலிடங்களைத் தேடவும் இழிந்தோர்க்கு முன் தாங்கள் இராசாக்களைப்போலிருந்தாலும் போதாதென்றும் தாங்கள் தெய்வங்களைப்போலிருக்கவேண்டுமென்றும் விரும்பிச் சபையிலே தானும் தங்கள் மேன்மையை எடுத்துப்பேசி மற்றவர்களை நாய்களைப்போலத் தீமையாய் நடத்தத் துணிவார்கள். அதனால் இவர்களுக்கு வெட்கமுண்டாகி அவர்களை மேன்மைப்படுத்தப் பிரியமில்லாமல் ஒருவருக்கொருவர் வாக்குவாதம்பண்ணவும் சண்டையுண்டாக்கவும் ஏதுவாய்வரும். இதினாலே மாறாத பகையும் ஆறாத் தழும்பும் தீராத கோபமும் அதனாலே கொலையும் மற்றுள்ள அனேக துற்குணங்களு

ம் உண்டாகிறது. இப்படியிருக்கையாற் சாதி பேதம் பார்த்தால் எவ்விதத்திலும் கேடென்பதை அறிந்து அதைத் தள்ளிச் சுத்தமான கிறிஸ்தவர்களாய்க் கிறிஸ்துநாதரும் அவருடைய அப்போஸ்தலரும் நடந்ததுபோல யாவரும் நடவுங்கள். எப்படியெனில் நீங்கள் யேசுநாதருடைய அன்பையும்மனத்தாழ்மையையுங் கற்றுக்கொண்டு அவைகளைக் குறித்து அவர் கொடுத்தகட்டளைகளையும் உற்று அறிந்து மற்றவர்களைப் பார்க்க நீங்கள் மேன்மை யுடையவர்களென்று உங்களை உயர்த்தாமல் எந்தமனிதனுக்கும் யேசுவினிமித்தம் உதவிசெய்யவேண்டும்.

உ. பிராமணர், சத்திரியர், வைசியர் சூத்திரர் என்றும் அவர்களுக்குக் கீழான சங்கரசாதியென்றும் இவ்வூர்களில் வழங்குகிற சாதிவித்தியாசத்தைப் பற்றிக் கவனியாமற் கிறிஸ்தவர்களாகிய யாவரும் மாமிசசெனனமொழிந்து தெய்வபுத்திரராயிருக்கையால் யாவரும்சகோதரராயிருக்கிறார்களென்று எண்ணி அவர்களுடனே இருக்கவும் அவர்களுடனே கொண்டாட்டம்பண்ணவும் வேண்டிவந்த சமயத்தில் ஒயாதொரு வேற்றுமை பாராமல் நடந்துகொள்ளுகிறதுமன்றி அவர்கள் உங்களுக்கு விருப்பத்தோடே கொடுக்கிறபண்டபதார்த்தங்களைச் சந்தோஷித்தோடே யேற்றுக்கொள்ள வேண்டும்.

௩. கோவிலிலே தேவாராதனைக்குக் கூடும் பொழுது நீங்கள் முதலிடத்தை விரும்பாமல் உலகவியல்புக்கேற்ற ஒழுங்கின்படி பிள்ளைகள்

ஒரு கூட்டமாகவும் புருஷர் ஒருகூட்டமாகவும் பெண்கள் ஒருகூட்டமாகவும் இருக்க வேண்டும்.

௪. நீங்கள் மறு சமயத்தவர்களுக்குள்ளே வழங்கும் பொய் சூது, வஞ்சனை, அசுத்தம், ஆங்காரம், அவபத்தி முதலானவைகளைத் தள்ளி சுவிசேஷத்திலே இருக்கிற பிரமாணங்களின்படியே சிந்தனையாய் நடந்துகொள்ளவேண்டும். இவைகளை நீங்கள் நன்றாய்ச் சிந்தித்துப் பார்க்கவும் சாதிவேற்றுமை பார்ப்பதைத் தள்ளவும் உங்களுக்கு மனதில்லாவிட்டால் நீங்கள் பசாசின் பிள்ளைகளாக இருப்பீர்களென்பதை அறிந்து துக்கப்பட்டு உங்களைப் பட்சமாய் அழைக்கிற இயேசுவை நோக்கிச் சுத்த இருதயத்தை எங்களுக்குள்ளே உண்டாக்கி எங்களிலிருக்கிற அசுத்த ஆவியை நீக்கிச் சுத்தமான ஆவியைத் தாருமென்று வேண்டுதல்செய்யக்கடவீர்கள்.

நீங்கள் சிந்திக்கவேண்டியது கிறிஸ்துநாதர் பாவிகளை இரட்சிக்கும்படிக்குப் பட்டபாடுகளையும் மரணத்தையுமே அல்லாமற் சாதிவேற்றுமையையும் மேட்டிமையையுமல்ல ஆதலாற் கிறிஸ்தவர்களுக்கு ஏற்ற ஒழுங்கின்படி அன்பாயும் மனத்தாழ்மையாயும் ஒருமையாயும் நடக்கத் தொடங்குவீர்களாக அதற்கு இயேசுநாதர் உங்களுக்குவேண்டிய பெலனையுந் தம்முடைய ஆசீர்வாதத்தையும் அருளிச்செய்யக்கடவார்.